**நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டம் (கட்டம்- 01) - 2020**

---

நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டத்தின் (கட்டம்- 01) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 யூன் 01 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு மற்றும் 2016 மார்ச் 18 ஆந் திகதிய சீஎல்கே 1013- 02 எல் ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கை மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் குறிக்கோள்களாவன, (அ) நீர்கொழும்பு மாநகர சபை பகுதியில் 73,000 மக்களிற்கான விரிவாக்கப்பட்ட கழிவுநீர் சேகரிப்பு சுத்திகரிப்பு முறைமை மற்றும் சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல், (ஆ) தண்ணீர் மற்றும் சுகாதார துறை கட்ட வேலைகளை தெளிவுபடுத்தல் தரமுயர்த்துதல், (இ) வறுமைக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட வறுமைக் குறைப்பின் கொள்கைகள் அபிவிருத்தி ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கு நுழைவு வசதிகள், (ஈ) கடலமுக்கம் மற்றும் கடற்சுழற்சச்சி தந்திரோபாயம் மற்றும் அமுக்கம் மற்றும் உயிரணுவியல் பராமரிப்பு என்பனவாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் கடனாகவும் ரூபா 991.81 மில்லியனிற்கு சமமான யூரோ 5.70 மில்லியன் மானியமாகவும் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 4,524 மில்லியனிற்கு சமமான யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கபட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

---

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| நடவடிக்கை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயராற்றல் எதிர்பார்க் கப்பட்டது | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயராற்றல் உள்ளபடியானது | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| நீர் கொழும்பு கழிவகற்றல் முறைமைக்காக இறைக்கும் இல்லம் மற்றும் வீட்டு இணைப்புக்களுடன் சேகரிப்பு முறைமையின் நிர்மாணம் | ஒப்பந்தமானது 2019 இல் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டது | ஒப்பந்தமானது 2021 யூன் 30 வரை வழங்கப்பட்டி ருக்கவில்லை | வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனை (டிஎஸ்சீ) ஒப்பந்தங்கள் (18 மாதங்கள் கற்கைகள் கட்டம்) கொள்வனவு 2018.08.21 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் இதன்படி ஒப்பந்த வேலைகள் 2020 நவம்பரில் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஏப்ரல் 21 நிகழ்வு காரணமாக அளவை வேலைகள் அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட கடுமையான நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகள் காரணமாக தாமதப்பட்டிருந்தது. மேலும், நாட்டில் நிலவிய கோவிட்-19 நோய்தொற்றாலாலும் தாமதப்பட்டிருந்தது. தற்போது SHIFT செயற்திட்டம் | 2022 யூன் மாதத்தில் கடன் முடிவடைவதால் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றியிருந்தது. | |
| செயற்திட்ட பகுதியில் குறைந்த வருமான சமூகத்தினரின் சுகாதார வசதிகளின் முன்னேற்றம் | ஒப்பந்தங்கள் 2018 யூனில் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டது | 2021 யூன் 30 வரையும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டி ருக்கவில்லை. | கோவிட் நோய் தொற்று நிலை காரணமாக தாமதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகள் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு காத்திருந்தது. | வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| காணி சுவீகரிப்பு | நீர்கொழும்பு 12 எண் காணி, காலி 17 எண் காணி மற்றும் உனவத்துனவில் 07 எண் காணி | காணிச் சுவீகரிப்பு செயற்பாடு நடைமுறையில் உள்ளது. | நீர்கொழும்பு WWTP காணி மற்றும் இரண்டு இறைக்கும் இல்ல காணிகள் ஆபத்தன காணியாக இனங்காணப்பட்டன. WWTP காணிக்காக – பிரிவு 4 விசாரணை பூர்த்தியாக்கப்பட்டது. தீர்மான் நிலுவையில் உள்ளது. இரண்டு இறைக்கும் இல்ல காணிகளிற்காக- நீர் கொழும்பு மாநகர சபை மற்றும் பிரதேச செயலகத்திற்கு உடமையான காணிகளிற்கு நேரடி நுழைவு வழி இருக்கவிலை. நாங்கள் ஏனைய 06 தனியார் காணிகள் தொடர்பான வேலைகளை ஏற்கனவே நிறைவேற்றியுள்ளோம் மேற்குறிப்பிட்ட அளவைகள் நிர்மாணக் கட்டத்தில் ஒப்பந்தகாரருக்கு காணிகளை கையளிப்பதற்கு எவ்வித தாமதங்களையும் தவிர்பதற்கு எடுக்கப்பட்டிருந்தன. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காணியின் உரிமையை மாற்றி பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| கொள்கை மற்றும் நிறுவன ரீதியான தரமுயர்த்தல் ஆலோசனை (PIEC) | 93 % | 73 % | கொள்வனவு தாமதமே ஆரம்ப தாமதமாக இருந்தது. மேலும், கோவிட்- 19 நோய் தொற்று காரணமாக குடியிருப்பாளர் செயலமர்வு வெற்றியளிப்பு கடினமாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தத்தின் 95 சதவீத வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதுடன் இலக்கின் இறுதி திகதி 2021.07.31 ஆக உள்ளது. | வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| கழிவகற்றல் முகாமைத்துவ திறன் அபிவிருத்தி ஆலோசனை (SMSDC) | கொள்வனவு நடைமுறை 2018 நவம்பரில் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டது. | கொள்வனவு நடைமுறை தொடங்கப் பட்டிருக்கவில்லை | பொதி- 1: SMSDC கீழ் (சேவை ஒப்பந்தம்) – EOI ஆவண மதிப்பாய்வு கட்டம்<br>பொதி- 2: கழிவகற்றல் O&M இற்காக உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்கி விநியோகித்தல் - ஆவண மதிப்பாய்வு கட்டம்<br>பொதி- 3: NWSDB பயிற்சி நிலையத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கான ஆதரவு – தயாரித்தல் கட்டம்.<br>தாமதங்களை தவிப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன | வேலையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| வடிவமைப்பு மற்றும் ஆலோசனை மேற்பார்வை (டிஎஸ்சீ) | 61 %<br>(நீர்கொழும்பு, கால, களணி பகுதியில் சாத்திய வளக் கற்கை) | 35%<br>(சகல மூன்று பகுதிகளிலும் சாத்திய வளக் கற்கை தொடருகின்றன) | அளவைகளில் செய்யப்பட்ட தடை, 2019 ஏப்ரல் 21 இன் நிகழ்வு மற்றும் கோவிட்-19 தொற்று நோய் நிலமை காரணமாக பல நாடுகளில் விதிக்கப்பட்ட பிரயாணத்தடை என்பன காரணமாக நிகழ்ச்சித்திட்டம் பின்தங்கியிருந்தது. | வேலையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| 2016 இல் உடன்படிக்கை கைசாத்திட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2018 இல் கடனளிக்கும் முகவரால் கடன் கைதவிர்ப்பு தொடங்கப்பட்டிருந்ததின் விளைவால் விளைவால் 2020 திசெம்பர் 31 வரை கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளில் கடப்பாட்டு கட்டணமாக ரூபா 318.70 மில்லியன் தொகையை கடனளிக்கும் முகவர் அறவிட்டிருந்தார். | ஆரம்பத்தில் வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனை ஒப்பந்தத்தின் (டிஎஸ்சீ) கொள்வனவில் தாமதமான காரணத்தால் வேலை தொடங்குவதில் தாமதம் மற்றும் கடன் கைதவிர்ப்பு தொடங்குதல் என்பவற்றில் தாமதம் விளைந்திருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றில் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்விற்கு உட்ப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருந்தது. அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.. | உரிய நேரத்தில் உள்ளக கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாதிருந்த விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காலி மாவட்டத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியை நிர்மாணிப்பதற்கு பட்டியலிடப்பட்டு சுத்திகரிப்பு பொறியின் ஒருபகுதி வடிவமைப்பு வேலை செயற்திட்டத்தால் பூர்த்தியாக்கப்பட்டது. மேலும் | காணி சுவீகரிப்பு நடைமுறை செயற்பாட்டில் உள்ளது. பிரிவு 38A வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது காணிக்கு நுழைவதற்கான பாதை இருக்கவில்லை. மதிப்பீட்டிற்கு செல்வதற்கு விரிவான நிலஅளவை வரைபடத்திற்கு காத்திருக்கின்றது. | காணிச் சுவீகரிப்புகள் வினைத்திறனான, சிக்கனமான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அந் நோக்கத்திற்கான காணியை தெரிவு செய்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் சுவீகரிப்பு நடைமுறைகளை தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 17 இல் பூர்த்தியாக்கப்பட்டது. எவ்வாறாயினும், காணி கொள்வனவு செய்வதற்காக ஏற்கனவே செலுத்தப்பட்ட முற்பணத்தை றவிடுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால-மைப்புச் சபையால் தொடரப்பட்ட வழக்கு மீதான தீர்ப்பிலுள்ள தாமதத்தால் 2021 யூன் 30 வரையும் காணியின் சட்ட ரீதியான உரிமையாண்மை மாற்றப்பட்டிருக்கவில்லை.

மேலும், நீதி மன்ற வழக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாமைப்புச் சபை சட்டப் பிரிவால் தனியாக கையாளப்பட வேண்டியிருந்தது.